## காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, மாசி மாதம் 24ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 09ஆம் தேதி, திங்கள்கிழமை**

குறள்:399

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

குறள் விளக்கம்:

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.

### பொன்மொழி

கஷ்டங்களும், நஷ்டங்களும் அடைந்த பிறகே மனிதன் அதிக அடக்கத்தையும், அறிவையும் பெறுகின்றனர்.

### பழமொழி

*Bend the twig, bend the tree*

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

### பொதுஅறிவு வினா விடை

- பாம்பன் இரயில் பாலம் கட்டப்பட்ட ஆண்டு - 1901
- தமிழகத்தின் நீளமான ஆறு - காவரி

### இரண்டொழுக்க உறுதிமொழி

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

Abbreviations

D.D. - Demand Draft - கேட்பு வரைவோலை

DA - Dearness Allowance - அகவிலைப்படி

## இன்றைய செய்திகள்

- தமிழகத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளுடன், எடப்பாடி பழனிசாமி இன்று ஆலோசனை நடத்துகிறார்.
- சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரதமர் மோடியின் சமூக வலைத்தள கணக்குகளை தமிழகத்தை சேர்ந்த இருவர் உள்பட 7 பெண் சாதனையாளர்கள் கையாண்டனர்.
- சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, 103 வயது தடகள வீராங்கனை உள்பட 15 சாதனை பெண்களுக்கு தேசிய விருது வழங்கி ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் கவுரவித்தார்.
- இந்தியாவில் கொரோனா நோய்க்கிருமியால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்து உள்ளது. தமிழகத்தில் 1,086 பேர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். இந்த நிலையில் அமெரிக்காவில் இருந்து சென்னை வந்த சிறுவனுக்கு கொரோனா வைரஸ் அறிகுறி இருப்பது தெரியவந்து உள்ளது.
- தமிழக சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று (திங்கட்கிழமை) மீண்டும் தொடங்குகிறது. இந்த கூட்டத்தொடரில் மானிய கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறும்.
- 1 முதல் 8-ம் வகுப்புகளுக்கு மூன்றாம் பருவத்தேர்வு அடுத்த மாதம் 1-ந்தேதி தொடங்குகிறது.
- தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் போட்டி தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டு உள்ளது.